# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
# அசல் வழக்கு எண். 163/2021

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் செவ்வாய்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 05.08.2025 | தகப்பனார் பெயர்: | ஹிதயத்துல்லா |
| பெயர்: | லியாகத் அலி<br>(PW-1 Chief ) | தாலுக்கா: | தரங்கம்பாடி |
| கிராமம்: | கோவில்பத்து, | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 20 /2025 |

**முதல் விசாரணை : 05.08.2025**

நான் இவ்வழக்கின் வாதியின் கணவர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபன பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபன பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 02.08.2021 ஆம் தேதியிட்ட வாதியின் தாயார் உம்மல்குதா பீவி இறப்புச் சான்றின் அசல் வா.சா.ஆ.1 ஆகவும்,

2. 09.08.2021 ஆம் தேதியிட்ட வாதியின் தந்தை அப்துல் வகாப் இறப்புச் சான்றின் அசல் வா.சா.ஆ.2 ஆகவும்,

3. 06.09.2021 ஆம் தேதியிட்ட வாரிசு சான்றின் கணினி பதிவிறக்க நகல்வா.சா.ஆ.3 ஆகவும்,

4. 16.06.2008 ஆம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதியின் மனைவியும், 2–ம் பிரதிவாதயின் தாயாருமான லோகாம்பாள் 3–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த

கிரய சாசன சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும்,

5. 07.08.2021 ஆம் தேதியிட்ட வில்லங்க சான்றின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.5 ஆகவும்,

6. 19.08.2021 ஆம் தேதியிட்ட கணினி வழி பதிவிறக்க சிட்டாவின் நகல் வா.சா.ஆ.6 ஆகவும்

7. 20.08.1964 ஆம் தேதியிட்ட வாதியின் தாயார் கிரயம் பெற்ற கிரய சாசனம் வா.சா.ஆ.7 ஆகவும்,

8. 07.08.2021 ஆம் தேதியிட்ட வில்லங்க சான்றின் கணினி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.8 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.